இந்திய உச்ச நீதிமன்றம்

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.ஆர். சுபாஷ் ரெட்டி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.ஹ்ரிஷிகேஷ் ராய்

குற்றவியல் மேல்முறையீடு எண் 1022/2021

கஞ்சன் ஷர்மா ...மேல்முறையீட்டாளர்

/எதிர்/

உத்தரப் பிரதேச மாநில அரசு

மற்றும் ஒருவர் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 306 – இறந்தவர் (புகார்தாரரின் சகோதரர்) மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு சென்று, தனது ஜேபில் வைத்திருந்த ஒரு சிறிய பாட்டிலிலிருந்து விஷத்தை எடுத்து குடித்தார் – மேல்முறையீட்டாளர் மீதான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம், பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழான நடவடிக்கை – மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த கு.வி.மு.ச., பிரிவு 482-ன் கீழான மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது –

மேல்முறையீட்டில், தீர்ப்பளிக்கப்பட்டதாவது: இறந்தவர் மேல்முறையீட்டாளரின் வீட்டின் முன் விஷம் குடித்ததால் மட்டும், மேல்முறையீட்டாளர் மற்றும் இறந்தவருக்கு இடையே உறவு இருந்தது எனக் கருத முடியாது – இ.த.ச., பிரிவு 306-ன் படி மேல்முறையீட்டாளர் இறந்தவரின் தற்கொலைக்கு தூண்டினார் எனக் கூறுவதற்கான எந்த ஆதாரமும் இல்லை – பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம், பிரிவு 3(2)(v) தொடர்பாக கூட, மேல்முறையீட்டாளர் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் சாதி இழிவுச்சொற்களால் இறந்தவரை அவதூறு கூறினர் என்ற தெளிவற்ற மற்றும் வெற்று அறிக்கையைத் தவிர, குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்கான எந்தவொரு மூலப்பொருளையும் ஈர்க்கும் பதிவு எதுவும் இல்லை – முன்னதாக, மேல்முறையீட்டாளரும் அவரது தந்தையும் காவல் நிலையத்திற்குச் சென்று, இறந்தவர் தொடர்ச்சியாக மேல்முறையீட்டாளரை அழைத்து, அவரை மேல்முறையீட்டாளர் திருமணம் செய்து கொள்ள வேண்டும், இல்லையெனில் அவர் இறந்துவிடுவார் என்று அச்சுறுத்துவதாக இறந்தவர் மீது புகார் அளித்தனர் – இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இ.த.ச., பிரிவு 107-ன் பொருளில் எந்தவொரு ஆதாரமும் இல்லாதபடியால், மேல்முறையீட்டாளர் மீது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம், பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் வழக்கு தொடருவதற்கு எந்த அடிப்படையும்

இல்லை – எந்தவொரு நம்பகமான ஆதாரமும் இல்லாமல், மேல்முறையீட்டாளரை குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்துவது நீதியின் கேலிக்கூத்தாக இருக்கும் - மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த கு.வி.மு.ச., பிரிவு 482-ன் கீழான மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது தவறானது – விசாரிப்பதற்கான உத்தரவு/பிணையில்லா பற்றாணை(NBW) மற்றும் மேல்முறையீட்டாளர் மீதான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம், பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழான நடவடிக்கை நீக்கறவு செய்யப்பட்டது – பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 – பிரிவு 3(2)(v) – குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 – பிரிவு 482.

தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 306 – தற்கொலைக்கு தூண்டுதல் – தற்கொலை செய்யத் தூண்டும் அல்லது உடந்தையாக இருக்கும் குற்றவாளியின் நேரடியான செயல் இல்லாமல், பிரிவு 306-ன் கீழ் ஒருவரை தண்டிக்க முடியாது – பிரிவு 306-ன் கீழான குற்றத்திற்காக எந்தவொரு நபருக்கு எதிராக வழக்குத் தொடர, இறந்தவர் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிய ஒரு நேரடியான அல்லது உறுதியான செயல் அவசியம், அந்த செயல், வேறு

வழியின்றி, இறந்தவரை தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும்.

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 – பிரிவு 482 – உயர்நீதிமன்றம், பொருண்மைகளின் அடிப்படையில், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் கீழ் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மனுவை நிராகரித்ததன் மூலம், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 482-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பொருண்மைகள் தொடர்பான சர்ச்சைகளை கருத்தில் கொண்டு, தீர்ப்பளிக்க முடியாது என்ற முடிவை பதிவு செய்வதன் மூலம் தவறிழைத்தது – விசாரிப்பதற்கான உத்தரவு/பிணையில்லா பற்றாணை(NBW) மற்றும் மேல்முறையீட்டாளர் மீதான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம், பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழான நடவடிக்கை நீக்கறவு செய்யப்பட்டது - தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 306 – பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 – பிரிவு 3(2)(v).

சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் – "தூண்டுதல்" – அர்த்தம் – தீர்ப்பு: 'தூண்டுதல்' என்பது ஒருவரைத் தூண்டும் மனரீதியான செயலை அல்லது ஒரு

செயலைச் செய்வதற்கு ஒருவருக்கு உள்நோக்கத்துடன் உதவுவதை உள்ளடக்கியது.

மேல்முறையீட்டை அனுமதித்து, இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது:

1. இறந்தவர் மேல்முறையீட்டாளரை நேசித்தார் என்று கூறும் புகார்தாரர் மற்றும் பிற சாட்சிகளின் தன்னலத்திற்கான வாக்குமூலங்களைத் (self-serving statements) தவிர, மேல்முறையீட்டாளர் இறந்தவருடன் எந்தவொரு உறவையும் பேணி வந்தார் என்பதைக் காட்ட வேறு எந்த ஆதாரமும் இல்லை. பதிவிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில், சம்பவ நாளன்று இறந்தவர் மேல்முறையீட்டாளரின் வீட்டுக்குச் சென்று, தனது ஜேபில் வைத்திருந்த சிறிய பாட்டிலில் இருந்த விஷத்தை எடுத்து குடித்தார் என்பது தெளிவாக உள்ளது. அவர் மேல்முறையீட்டாளரின் வீட்டின் முன் விஷம் குடித்ததால் மட்டுமே, அவர்களுக்கு இடையே உறவு இருந்தது எனக் கூற முடியாது. 'தூண்டுதல்' (abetment) என்பது ஒருவரைத் தூண்டும் மனரீதியான செயலை அல்லது ஒரு செயலைச் செய்வதற்கு ஒருவருக்கு உள்நோக்கத்துடன் உதவுவதை உள்ளடக்கியது. தற்கொலை செய்யத் தூண்டும் அல்லது உடந்தையாக இருக்கும் குற்றவாளியின் நேரடியான செயல் இல்லாமல், இ.த.ச., பிரிவு 306-ன் கீழ் ஒருவரை தண்டிக்க முடியாது. இ.த.ச., பிரிவு 306-ன் கீழான குற்றத்திற்காக எந்தவொரு நபருக்கு எதிராக வழக்குத் தொடர, இறந்தவர் தற்கொலை

செய்துகொள்ளத் தூண்டிய ஒரு நேரடியான அல்லது உறுதியான செயல் அவசியம், அந்த செயல், வேறு வழியின்றி, இறந்தவரை தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும். இறந்தவருடன் மேல்முறையீட்டாளர் உறவைப் பேணி வந்தார் என்பதை நிரூபிக்க பதிவு எதுவும் இல்லை, மேலும், இ.த.ச., பிரிவு 306-ன் அர்த்தத்தில், மேல்முறையீட்டாளரின் தூண்டுதலால் இறந்தவர் தற்கொலை செய்துக்கொண்டார் என்று குற்றம் சாட்ட எந்தவொரு ஆதாரமும் இல்லை. பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், பிரிவு 3(2)(v) தொடர்பாக கூட, மேல்முறையீட்டாளர் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் சாதி இழிவுச்சொற்களால் இறந்தவரை அவதூறு கூறினர் என்ற தெளிவற்ற மற்றும் வெற்று அறிக்கையைத் தவிர, குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்கான எந்தவொரு மூலப்பொருளையும் ஈர்க்கும் பதிவு எதுவும் இல்லை. [பத்தி 9] [199-F-H; 200-A-C]

2. உண்மையில், முன்னதாக இறந்தவர் மேல்முறையீட்டாளரைக் பின் தொடர்ந்து தொந்தரவு செய்தபோது, மேல்முறையீட்டாளர் தனது தந்தையுடன் காவல் நிலையத்திற்குச் சென்று, இறந்தவர் மேல்முறையீட்டாளருக்கு செய்த அழைப்பை குறித்து புகார் அளித்துள்ளார். இது, உதவி ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்தும் தெளிவாகியுள்ளது. அவர் தனது வாக்குமூலத்தில்,

மேல்முறையீட்டாளர் தனது தந்தையுடன் காவல் நிலையத்திற்குச் சென்று, இறந்தவர் மேல்முறையீட்டாளரை தொடர்ச்சியாக அழைத்து, மேல்முறையீட்டாளர் அவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும், இல்லையெனில் அவர் இறந்துவிடுவார் என்று அச்சுறுத்துவதாக இறந்தவர் மீது புகார் அளித்தார் என்பதை தெளிவாக சான்றுரைத்துள்ளார். பதிவிலுள்ள ஆவணங்களை கருத்தில் கொண்டு மற்றும் இ.த.ச., பிரிவு 107-ன் பொருளில் எந்தவொரு ஆதாரமும் இல்லாதபடியால், மேல்முறையீட்டாளர் மீது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் சாட்டப்பட்ட குற்றத்திற்காக வழக்கு தொடருவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. எந்தவொரு நம்பகமான ஆதாரமும் இல்லாமல், மேல்முறையீட்டாளரை குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்துவது நீதியின் கேலிக்கூத்தாக இருக்கும். [பத்தி 10] [202-F-H; 203-A]

3. இதனையும் கருத்தில் கொண்டு, உயர்நீதிமன்றம், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் கீழ் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மனுவை நிராகரித்ததன் மூலம், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 482-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பொருண்மைகள் தொடர்பான சர்ச்சைகளை கருத்தில் கொண்டு, தீர்ப்பளிக்க முடியாது என்ற முடிவை பதிவு

செய்வதன் மூலம் தவறிழைத்துள்ளது.

[பத்தி 11] [203-A-B]

4. கு.வி.மு.ச., பிரிவு 482-ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் மீதான விசாரிப்பதற்கான உத்தரவு/பிணையில்லா பற்றாணை(NBW) மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி / சிறப்பு நீதிபதி (பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம்) நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள, இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழான குற்றத்திலிருந்து எழும் சிறப்பு வழக்கு விசாரணைக்கான நடவடிக்கைகள் நீக்கறவு செய்யப்பட்டது

[பிரிவு 12] [203-B-C]

சித்ரேஷ் குமார் சோப்ரா /எதிர்/ மாநில அரசு, (தேசிய தலைநகர் டெல்லி மாநில அரசு) (2009) 16 எஸ்.சி.சி. 605 : [2009] 13 எஸ்.சி.ஆர். 230; அமலேந்து பால் @ ஜந்து /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு, (2010) 1 எஸ்.சி.சி. 707 : [2009] 15 எஸ்.சி.ஆர். 836; எஸ்.எஸ்.சீனா /எதிர்/ விஜய் குமார் மகாஜன் மற்றும் ஒருவர், (2010) 12 எஸ்.சி.சி.

190 : [2010] 9 எஸ்.சி.ஆர். 1111: மற்றும் ராஜீவ் தாப்பர் மற்றும் பலர் /எதிர்/ மதன் லால் கபூர், (2013) 3 எஸ்.சி.சி. 330 : [2013] 3 எஸ்.சி.ஆர். 52 – சார்வுறப்பட்டது.

-

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2009] 13 எஸ்.சி.ஆர். 230	சார்வுறப்பட்டது	பத்தி 9
[2009] 15 எஸ்.சி.ஆர். 836	சார்வுறப்பட்டது	பத்தி 9
[2010] 9 எஸ்.சி.ஆர். 1111	சார்வுறப்பட்டது	பத்தி 9
[2013] 3 எஸ்.சி.ஆர். 52	சார்வுறப்பட்டது	பத்தி 9

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 102282021.

பிரிவு 482-ன் கீழான மனு எண் 27662/2019-ல் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 18.07.2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக - சஞ்சித் கர்கா.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக - அவிரல் சக்ஷேனா, சர்வேஷ் சிங் பாகல்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் திரு.ஆர். சுபாஷ் ரெட்டி** அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மனு எண் 27662/2019-ல் அலகாபாத் உயர் நீதிமன்றம், மனுதாரர் தாக்கல் செய்த குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் (கு.வி.மு.ச.) பிரிவு 482-ன் கீழான மனுவை தள்ளுபடி செய்து பிறப்பித்த 18.07.2019 தேதியிட்ட உத்தரவினால் மனக்குறையுற்று மனுதாரர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார்.

3. 11.05.2018 அன்று, மீரட் மாவட்டத்தின் டி.பி. நகர் காவல் நிலையத்தில், விஜய்தீப் (புகார்தாரர் மற்றும் இறந்தவரின் சகோதரர்) அளித்த புகாரின் பேரில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 328, 302 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (சுருக்கமாக, 'சட்டம்') பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ், குற்ற எண் 278/2018 கொண்ட முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டது, அதில், அவரது சகோதரன் விகாஸ் (இறந்தவர்) 04.05.2018 அன்று

மேல்முறையீட்டாளரான கஞ்சன் ஷர்மா என்பவரால் அவரது வீட்டிற்கு வரவழைக்கப்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அப்போது அவரது சகோதரர் PVM லாஜிஸ்டிக் கம்பெனியில் தனது பணியில் இருந்திருக்கிறார், அந்த அழைப்பு பெற்ற பிறகு, அவர் மேல்முறையீட்டாளரின் வீட்டுக்குச் சென்றுள்ளார், அங்கு அவரது சகோதரர் மேல்முறையீட்டாளரின் தந்தை, தாய் மற்றும் சகோதரி ஆகியோரைச் சந்தித்துள்ளார், அவர்கள் அனைவரும் அவரது சகோதரரை சாதி ரீதியான இழிவுசொற்கள் கூறி, அவருக்கு பலவந்தமாக விஷம் கொடுத்தனர், இதனால் அவரது சகோதரர் மயங்கி விழுந்தார். மேலும் புகார்தாரர், அவரது சகோதரர் கொண்டு செல்லப்பட்டதாகவும், மருத்துவமனையின் அலட்சியம் காரணமாக அவர் இறந்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

4. ஆரம்பத்தில், மேல்முறையீட்டாளர், அவரது சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோருக்கு எதிராக, இ.த.ச., பிரிவுகள் 328, 302 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழான தண்டிக்கதக்க குற்றங்களுக்காக மு.த.அ., பதிவு செய்யப்பட்டது. விசாரணைக்கு பிறகு, இறுதி அறிக்கை மேல்முறையீட்டாளருக்கு எதிராக மட்டும் இ.த.ச., பிரிவு 306 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது. இந்த இறுதி அறிக்கையின் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு எதிராக வழக்குப் பதிவு

செய்யப்பட்டு, 21.02.2019 அன்று பிணையில்லா பற்றாணைகள் மேல்முறையீட்டாளருக்கு எதிராக வழங்கப்பட்டது. இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, மேல்முறையீட்டாளருக்கு எதிராக, சிறப்பு அமர்வு வழக்கு எண் 23/2019 (மாநில அரச /எதிர்/ கஞ்சன் ஷர்மா) என்ற வழக்கு இ.த.ச., பிரிவு 306 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கு கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி / சிறப்பு நீதிபதி, பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், மீரட் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

5. இங்குள்ள மேல்முறையீட்டாளர், தனக்கு எதிராக வழங்கப்பட்ட விசாரிப்பதற்கான உத்தரவு/பிணையில்லா பற்றாணை(NBW) மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி / சிறப்பு நீதிபதி, பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிறப்பு அமர்வு வழக்கு எண் 23/2019-ல் குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்ய கோரி, கு.வி.மு.ச., பிரிவு 482-ன் கீழ் ஒரு மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இ.த.ச., பிரிவு 306 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்காக வழக்கு தொடர மேல்முறையீட்டாளருக்கு எதிராக எந்த குற்றமும் செய்யப்படவில்லை என்பதே உயர் நீதிமன்றத்திலுள்ள

மேல்முறையீட்டாளரின் வழக்காகும். கு.வி.மு.ச., 482-வது பிரிவின் கீழ், சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாக இந்த கட்டத்தில் தீர்ப்பு வழங்க முடியாது என்ற அடிப்படையில், இந்த மனுவை எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

6. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு சஞ்சித் கார்கா மற்றும் 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு அவிரால் சக்ஸேனா ஆகியோரின் வாதங்களை கேட்டறிந்தோம். இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரான புகார்தாரருக்கு சார்வு செய்யப்பட்டிருந்தாலும், அவர் சார்பாக யாரும் முன்னிலையாகவில்லை.

7. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு கார்கா, மேல்முறையீட்டாளர் மீது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் சாட்டப்பட்ட குற்றத்திற்காக வழக்கு தொடருவதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்று முதன்மையாக வாதிட்டார். இறந்தவர் மேல்முறையீட்டாளரைப் பின்தொடர்ந்து சென்று திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தி தொல்லை கொடுத்ததைத் தவிர, மேல்முறையீட்டாளர் இறந்தவரின் தற்கொலைக்குத் தூண்டினார் என்று குற்றம் சாட்ட எவ்வித அடிப்படையுமில்லை என்ற வாதத்தை முன்வைத்தார்.

சம்பவம் நடந்த தினமான, அதாவது 04.05.2018 அன்று, இறந்தவர் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு வந்து, அவர் மேல்முறையீட்டாளரை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றும், அவரது திருமணம் முடிவு செய்யப்படாவிட்டால் விஷம் குடிப்பேன் என்றும் கத்தத் தொடங்கினார் என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது. சிறிது நேரத்தில் அவர் கையில் வைத்திருந்த ஒரு சிறிய பாட்டிலில் இருந்து விஷத்தை குடித்து, அவர் மயக்கமடைந்தார், பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்தார். இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306/107-ன் எந்தவொரு கூறுகளும் இல்லாத நிலையில், இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் சாட்டப்பட்ட குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை விசாரணைக்கு உட்படுத்தப்பட முடியாது என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது. பதிவில் உள்ள ஆதாரங்களைக் கருத்தில் கொள்ளும்போது, சட்டப்பிரிவு 3(2)(v)-ன் கீழ் உள்ள குற்றம் கூட நிரூபிக்கப்படவில்லை என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது.

8. மறுபுறம், 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசின் கற்றறிந்த வழக்கறிஞர், இறந்தவர் மேல்முறையீட்டாளருடன் தொடர்பில் இருந்தார் என்ற வாதத்தை முன்வைத்தார். மேல்முறையீட்டாளர் இறந்தவரை திருமணம் செய்ய மறுப்புத் தெரிவித்ததால், இறந்தவர் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார். மேல்முறையீட்டாளர் பேணி வந்த உறவு

காரணமாக, இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306-ன் பொருளில் இறந்தவரை மேல்முறையீட்டாளர் தற்கொலை செய்ய தூண்டியதாக அமைகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினர், இறந்தவரை ஜாதி ரீதியான இழிவுச்சொற்கள் கூறி துன்புறுத்தியதால், சட்டப்பிரிவு 3(2)(v)-ன் கீழ் சாட்டப்பட்ட குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர் மீது தக்கவிதமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது எனவும் கூறப்பட்டது.

9. இரு தரப்பு வாதங்களை கேட்டடறிந்து, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மற்றும் பதிவில் உள்ள மற்ற ஆவணங்களை பரிசீலித்தோம். இறந்தவர் மேல்முறையீட்டாளரை நேசித்தார் என்று கூறும் புகார்தாரர் மற்றும் பிற சாட்சிகளின் தன்னலத்திற்கான வாக்குமூலங்களைத் (self-serving statements) தவிர, மேல்முறையீட்டாளர் இறந்தவருடன் எந்தவொரு உறவையும் பேணி வந்தார் என்பதைக் காட்ட வேறு எந்த ஆதாரமும் இல்லை. பதிவிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில், சம்பவ நாளன்று 04.05.2018 அன்று, இறந்தவர் மேல்முறையீட்டாளரின் வீட்டுக்குச் சென்று, தனது ஜேபில் வைத்திருந்த சிறிய பாட்டிலில் இருந்த விஷத்தை எடுத்து குடித்தார் என்பது தெளிவாக உள்ளது. அவர் மேல்முறையீட்டாளரின் வீட்டின் முன் விஷம் குடித்ததால் மட்டுமே, அவர்களுக்கு இடையே உறவு இருந்தது எனக் கூற முடியாது. அவர் மேல்முறையீட்டாளரின் வீட்டின் முன் விஷம் குடித்ததால் மட்டுமே,

அவர்களுக்கு இடையே உறவு இருந்தது எனக் கூற முடியாது. 'தூண்டுதல்' (abetment) என்பது ஒருவரைத் தூண்டும் மனரீதியான செயலை அல்லது ஒரு செயலைச் செய்வதற்கு ஒருவருக்கு உள்நோக்கத்துடன் உதவுவதை உள்ளடக்கியது. தற்கொலை செய்யத் தூண்டும் அல்லது உடந்தையாக இருக்கும் குற்றவாளியின் நேரடியான செயல் இல்லாமல், இ.த.ச., பிரிவு 306-ன் கீழ் ஒருவரை தண்டிக்க முடியாது. இ.த.ச., பிரிவு 306-ன் கீழான குற்றத்திற்காக எந்தவொரு நபருக்கு எதிராக வழக்குத் தொடர, இறந்தவர் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிய ஒரு நேரடியான அல்லது உறுதியான செயல் அவசியம், அந்த செயல், வேறு வழியின்றி, இறந்தவரை தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும். இறந்தவருடன் மேல்முறையீட்டாளர் உறவைப் பேணி வந்தார் என்பதை நிரூபிக்க பதிவு எதுவும் இல்லை, மேலும், இ.த.ச., பிரிவு 306-ன் அர்த்தத்தில், மேல்முறையீட்டாளரின் தூண்டுதலால் இறந்தவர் தற்கொலை செய்துக்கொண்டார் என்று குற்றம் சாட்ட எந்தவொரு ஆதாரமும் இல்லை. சட்டப்பிரிவு 3(2)(v) தொடர்பாக கூட, மேல்முறையீட்டாளர் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் சாதி இழிவுச்சொற்களால் இறந்தவரை அவதூறு கூறினர் என்ற தெளிவற்ற மற்றும் வெற்று அறிக்கையைத் தவிர, குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்கான எந்தவொரு மூலப்பொருளையும் ஈர்க்கும் பதிவு எதுவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. சித்ரேஷ் குமார் சோப்ரா /எதிர்/ மாநில அரசு, (தேசிய

தலைநகர் டெல்லி மாநில அரசு) [(2009) 16 எஸ்.சி.சி. 605] என்ற வழக்கில், இந்த நீதிமன்றம் தூண்டுதல் என்ற அம்சத்தை பற்றி விசாரிக்கும் வாய்ப்பை பெற்றது. இந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு செயலைச் செய்யத் தூண்டுவதற்கோ, ஏவுவதற்கோ அல்லது ஊக்குவிப்பதற்கோ நோக்கம் இருந்திருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. மேலும், ஒவ்வொரு தனிநபரின் தற்கொலை எண்ண முறையும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறது என்றும், ஒவ்வொருவருக்கும் தன்மதிப்பு மற்றும் சுயமரியாதை குறித்த தனிப்பட்ட கருத்துக்கள் உள்ளன என்றும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்கொலை வழக்குகளை கையாள்வதில் எந்தவொரு கட்டாய அணுகுமுறையையும் நிர்ணயிப்பது சாத்தியமற்றது என்றும், ஒவ்வொரு வழக்கையும் அதன் சொந்த பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அமலேந்து பால் @ ஜந்து /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு, [(2010) 1 எஸ்.சி.சி. 707] என்ற வழக்கில், இ.த.ச., பிரிவு 306-க்குள் ஒரு வழக்கை கொண்டு வர, இந்த நீதிமன்றம் கீழ் கண்டவாறு தீர்ப்பளித்தது:

> "12. ஆகவே, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 306-ன் கீழ் ஒருவரை குற்றவாளி என்று அறிவிக்கும் முன், நீதிமன்றம் வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் மிக நுட்பமாக ஆராய வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவருக்கு இழைக்கப்பட்ட

கொடுமைகளும், துன்புறுத்தல்களும், வேறு வழியில்லாமல் அவரை வாழ்க்கையை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு தள்ளியதா என்பதைக் கண்டறிய முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை மதிப்பிட வேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தற்கொலைக்குத் தூண்டியதாகக் கூறப்படும் வழக்குகளில் தற்கொலை செய்வதற்குத் தூண்டிய நேரடி அல்லது மறைமுக செயல்கள் இருப்பதற்கான ஆதாரம் இருக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிய அல்லது கட்டாயப்படுத்திய எந்தவொரு நேர்மறையான நடவடிக்கையும் நிகழாத நிலையில், துன்புறுத்தல் குற்றச்சாட்டின் அடிப்படையில் மட்டுமே, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 306-ன் கீழான தண்டனை நிலையானது அல்ல.

13. இ.த.ச., பிரிவு 306-க்குள் ஒரு வழக்கை கொண்டு வர, தற்கொலை வழக்கு இருக்க வேண்டும் மற்றும் குறிஅந்த குற்றத்தைச் செய்ததில், தற்கொலைக்குத் தூண்டியதாகக் கூறப்படும் நபர், தூண்டுதல் செயல் மூலமாகவோ அல்லது தற்கொலையைச் செய்வதற்கு வசதி செய்துகொடுக்கும் குறிப்பிட்ட செயலைச் செய்வதன் மூலமாகவோ ஒரு செயலில் உள்ள பங்கை ஆற்றியிருக்க வேண்டும். ஆகையால்,

மேற்கூறிய குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306-ன் கீழ் தண்டனை விதிக்கும் முன், குற்றம் சாட்டப்பட்ட நபரால் செய்யப்பட்ட தூண்டுதல் செயலை அரசுத் தரப்பு நிரூபிக்க வேண்டும்."

S எஸ்.எஸ்.சீனா /எதிர்/ விஜய் குமார் மகாஜன் மற்றும் ஒருவர், (2010) 12 எஸ்.சி.சி. 190 என்ற வழக்கின் தீர்ப்பில், இந்த நீதிமன்றம், இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306-ன் கூறுகளை மீண்டும் உறுதி செய்தது. அந்த வழக்கின் பத்தி 25-ல் கூறியிருப்பதாவது:

"25. தூண்டுதல்' (abetment) என்பது ஒருவரைத் தூண்டும் மனரீதியான செயலை அல்லது ஒரு செயலைச் செய்வதற்கு ஒருவருக்கு உள்நோக்கத்துடன் உதவுவதை உள்ளடக்கியது. தற்கொலை செய்யத் தூண்டும் அல்லது உடந்தையாக இருக்கும் குற்றவாளியின் நேரடியான செயல் இல்லாமல், தண்டனை வழங்க முடியாது. சட்டமன்றத்தின் நோக்கம் மற்றும் இந்த நீதிமன்றம் வழங்கிய வழக்குகளின் அகவுரை தெளிவாகக் காட்டுவது என்னவென்றால், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 306-ன் கீழ் ஒரு நபரை குற்றவாளியாகத் தீர்ப்பளிக்க, குற்றத்தைச் செய்வதற்கான தெளிவான குற்ற நோக்கம் (mens rea) இருக்க

வேண்டும். இறந்தவர் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிய ஒரு நேரடியான அல்லது உறுதியான செயல் அவசியம், அந்த செயல், வேறு வழியின்றி, இறந்தவரை தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும்."

ராஜீவ் தாப்பர் மற்றும் பலர் /எதிர்/ மதன் லால் கபூர், [(2013) 3 எஸ்.சி.சி. 330] என்ற வழக்கின் தீர்ப்பில், இந்த நீதிமன்றம் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் வகையத்தின் அதிகார வரம்பை ஆராய்ந்து, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, வழக்குகளை ரத்து செய்யக் கோரும் கோரிக்கையின் உண்மைத்தன்மையை கண்டறிய உயர் நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை வகுத்துள்ளது. நான்கு வழிமுறைகளை கொண்ட பத்தி 30 பின்வருமாறு வாசிக்கப்படுகிறது:

"30. மேற்கண்ட பத்திகளில் விவாதிக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் கீழ் உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, ரத்து செய்யக் கோரும் கோரிக்கையின் உண்மைத்தன்மையை தீர்மானிக்க பின்வரும் வழிமுறைகளை வரையறுக்கிறோம்.:

30.1. முதல் வழிமுறை: குற்றம் சாட்டப்பட்டவர் சார்ந்திருக்கும் ஆதாரங்கள் உறுதியானவை, நியாயமானவை மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாதவை, அதாவது ஆதாரங்கள் மிக உயர்ந்த மற்றும் குறைபாடற்ற தரமானதா?

30.2. இரண்டாம் வழிமுறை: குற்றம் சாட்டப்பட்டவர் சார்ந்திருக்கும் ஆதாரங்கள், அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் உள்ள வாதங்களை நிராகரிக்குமா, அதாவது புகாரில் உள்ள உண்மையான வாதங்களை நிராகரிக்கவும், ரத்து செய்யவும் அந்த ஆதாரங்கள் போதுமானதா, அல்லது அந்த ஆதாரங்கள் ஒரு நியாயமான நபரை குற்றச்சாட்டுகளின் உண்மை அடிப்படையை பொய் என்று நிராகரிக்கவும் கண்டிக்கவும் தூண்டுமா?

30.3. மூன்றாம் வழிமுறை: குற்றம் சாட்டப்பட்டவர் சார்ந்திருக்கும் ஆதாரங்கள் அரசுத் தரப்பு/புகாராளர் சார்பில் மறுக்கப்படவில்லையா; மற்றும்/அல்லது, அரசுத் தரப்பு/புகார்தாரரால் நியாயமான முறையில் மறுக்க முடியாத அளவுக்கு அந்த ஆதாரம் இருக்கிறதா?

30.4. நான்காம் படி:

இந்த வழக்கை தொடர்ந்து விசாரிப்பது நீதிமன்ற

செயல்முறைகளை தவறாக பயன்படுத்துவதாக அமையுமா? மேலும், அது நீதியின் குறிக்கோளை நிறைவேற்றாததா?

30.5. இந்த வழிமுறைகள் அனைத்திற்கும் பதில் நேர்மறையாக இருந்தால், உயர் நீதிமன்றத்தின் நீதித்துறை மனசாட்சி, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அத்தகைய குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்ய அதைத் தூண்ட வேண்டும். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நீதி கிடைப்பதுடன், நீதிமன்றத்தின் விலைமதிப்பற்ற நேரமும் மிச்சப்படுத்தப்படும், இல்லையெனில், அத்தகைய விசாரணை (மற்றும் அதிலிருந்து எழும் நடவடிக்கைகள்) குறிப்பாக குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படுவதில் முடிவடையாது என்பது தெளிவாகத் தெரிந்தால், அதை நடத்துவதில் நேரம் வீணடிக்கப்படும்."

10. இந்த நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட மேற்கூறிய அகவுரையை பிரயோகிப்பதன் மூலம், நாங்கள் பதிவில் உள்ள ஆவணங்களை கவனமாக ஆராய்ந்து, தற்போதுள்ள வழக்கின் பொருண்மைகளை சரிபார்த்துள்ளோம். இறந்தவருக்கும் மேல்முறையீட்டாளருக்கும் இடையே உறவு இருந்தது என்ற

வாக்குமூலத்தைத் தவிர, மேல்முறையீட்டாளர் இறந்தவருடன் எந்த உறவையும் பேணியதைக் காட்ட எந்தவொரு ஆதாரமும் இல்லை. உண்மையில், முன்னதாக இறந்தவர் மேல்முறையீட்டாளரைக் பின் தொடர்ந்து தொந்தரவு செய்தபோது, மேல்முறையீட்டாளர் தனது தந்தையுடன் காவல் நிலையத்திற்குச் சென்று, இறந்தவர் மேல்முறையீட்டாளருக்கு செய்த அழைப்பை குறித்து புகார் அளித்துள்ளார். இது, உதவி ஆய்வாளர் மனோஜ் குமாரின், 05.07.2018 அன்று பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்திலிருந்தும் தெளிவாகியுள்ளது. அவர் தனது வாக்குமூலத்தில், மேல்முறையீட்டாளர் தனது தந்தையுடன் காவல் நிலையத்திற்குச் சென்று, இறந்தவர் மேல்முறையீட்டாளரை தொடர்ச்சியாக அழைத்து, மேல்முறையீட்டாளர் அவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும், இல்லையெனில் அவர் இறந்துவிடுவார் என்று அச்சுறுத்துவதாக இறந்தவர் மீது புகார் அளித்தார் என்பதை தெளிவாக சான்றுரைத்துள்ளார். பதிவிலுள்ள ஆவணங்களை கருத்தில் கொண்டு மற்றும் இ.த.ச., பிரிவு 107-ன் பொருளில் எந்தவொரு ஆதாரமும் இல்லாதபடியால், மேல்முறையீட்டாளர் மீது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் சட்டப்பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் சாட்டப்பட்ட குற்றத்திற்காக வழக்கு தொடருவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. எந்த நம்பகமான ஆதாரமும் இல்லாமல் மேற்பரப்பாளரை குற்றவியல் வழக்கில் நிறுத்துவது நீதிக்கே விரோதமானதாகும். எந்தவொரு நம்பகமான ஆதாரமும்

இல்லாமல், மேல்முறையீட்டாளரை குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்துவது நீதியின் கேலிக்கூத்தாக இருக்கும்.

11. இதனையும் கருத்தில் கொண்டு, உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மனுவை நிராகரித்ததன் மூலம், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 482-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பொருண்மைகள் தொடர்பான சர்ச்சைகளை கருத்தில் கொண்டு, தீர்ப்பளிக்க முடியாது என்ற முடிவை பதிவு செய்வதன் மூலம் தவறிழைத்துள்ளது என்று நாங்கள் கருதுகிறோம்.

12. மேற்கூறிய காரணங்களுக்காக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் மனு எண் 27662/2019-ல் அல்லாபாத் உயர் நீதிமன்றம் பிறப்பித்த 18.07.2019 தேதியிட்ட உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. எனவே, மேற்கூறிய மனு அனுமதிக்கப்பட்டு, 21.02.2019 தேதியிட்ட உத்தரவு/பிணையில்லா பற்றாணை (NBW) மற்றும் மீரட் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி / சிறப்பு நீதிபதி (பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் சட்டம்) நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள, இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 306 மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம்,

பிரிவு 3(2)(v) ஆகியவற்றின் கீழ் குற்ற எண் 0278/2019-இலிருந்து எழும் சிறப்பு அமர்வு வழக்கு எண் 23/2019 (மாநில அரச /எதிர்/ கஞ்சன் ஷர்மா)-ன் விசாரணைக்கான நடவடிக்கைகள் நீக்கறவு செய்யப்பட்டது

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."